# கணினி வழி தமிழ் கற்பித்தல்: உச்சரிப்புக் கற்பித்தல்

முனைவர் சுப. திண்ணப்பன்
சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்

---

மொழி, கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஒரு கருவி. கருத்துப் பரிமாற்றம் ஒலி வழியாகவும் வரிவடிவத்தின் வாயிலாகவும் அமையலாம். ஒலிவழியாக அமையும் போது ஒலிகள் செவ்வனே உச்சரிக்கப்பட வேண்டும். இல்லாவிடில் கருத்துப் பரிமாற்றத்துக்கு இடையூறு ஏற்படும். இவ்வாறே வரிவடிவத்தின் வாயிலாக அமையும்போது பிழையில்லாமல் எழுதப் பெற வேண்டும். இல்லாவிடில் கருத்துப் பரிமாற்றம் கெட வாய்ப்பு ஏற்படும். எனவே ஒலிகளைச் சரியாக உச்சரிக்கக் கற்பித்தலும் வரிவடிவத்தைப் பிழையற எழுதக் கற்பித்தலும் மொழி கற்பித்தலில் இன்றியமையாத இடம் பெறுகின்றன. பிழையற்ற உச்சரிப்பு, வரிவடிவம் இரண்டும் முறையே பேசுதல், கேட்டல், எழுதுதல், படித்தல் திறன்களை வளர்க்க உதவுகின்றன. இவற்றில் பிழையற்ற உச்சரிப்புகளைக் கணினி வழி எப்படிக் கற்பிக்கலாம் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மொழி கற்பித்தல் முதன்மொழி நிலை, இரண்டாம் மொழி நிலை என இருவகைப்படும். இவ்விரண்டு நிலையிலும் தமிழ் மொழிக்குரிய ஒலிகளை உச்சரிக்கக் கற்பித்தலுக்குக் கணினியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்க இக்கட்டுரை முயல்கிறது. குறிப்பாக எழுத்துநிலை, சொல்நிலை, தொடர்நிலை, மேற்கூற்றுநிலை என வகைப்படுத்தியும் இக்கட்டுரை விளக்கும். மேலும் தமிழ் மொழியின் குறில் நெடில் வேறுபாடு, த் ட் வேறுபாடு, ற் ர் வேறுபாடு, ந் ண் ன் வேறுபாடு, ல் ள் ழ் வேறுபாடு - ஆகியவற்றைக் கற்பிக்கக் கணினியைப் பயன்படுத்தும் வகைகளையும் கட்டுரை தெளிவுப்படுத்தும். உச்சரிப்புக் கற்பித்தலில் கணினிவட்டு எத்தகைய முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவுவது என்பதையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டும்.